# ★ தாக்குதல் நடத்துவது குறித்து படைத் தளபதிகளுக்கிடையில் கருத்து முரண்பாடு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதிகளில் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளை நடத்துவது குறித்து படைத்தளபதிகளுக்கிடையில் கருத்து முரண்பாடு நிலவுகிறது.

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 84 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 21 இதழ் 113
யாழ்ப்பாணம் புதன்கிழமை 03 – 06 – 1992

## நீர்கொழும்பு, வத்தளையில் 13 தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

நீர்கொழும்பு, வத்தளைப் பகுதியில் சடந்த சில தினங்களில் 13 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புலிகளுடன் தொடர்பான வர்கள் என்று சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளில் இதுவரை 48 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (சி)

## 6வது முறையாக தி.மு.க. தலைவராக கருணாநிதி

(சென்னை)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக திரு. மு. கருணாநிதி ஆறாவது முறையாக ஒரு மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இக்கட்சியின் தலைவர் பதவிக்கு திரு. கருணாநிதியின் வேட்புமனு மாத்திரமே தாக்

(4ம் பக்கம் பார்க்க)

## ★ 2வது நாளாக அலம்பில் பகுதியில்

# முப்படைகளை எதிர்கொண்டு விடுதலைப் புலிகள் கடும் சமர்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு அலம்பில் 5ம் கட்டைப் பகுதியில் நேற்று இரண்டாவது நாளாக மும்முனைத்தாக்குதல் மத்தியிலும் விடுதலைப்புலிகள் சளைக்காது போரிட்டு வருகின்றனர்.

அலம்பிலிலிருந்து முன்னேறும் படையினருக்கு எதிராக புலிகள் கடும் தாக்குதல்களை நடத்திவருகின்றனர்.

அலம்பில் கரையோரப் பகுதி முழுவதும் பெருந்தொகையான படையினர் குவிக்கப்பட்டு அவ்ரோ ஹெலிகொப்டர், பொம்மர் விமானங்களின் உதவியுடனும் கடற்பீரங்கித் தாக்குதலுடனும் படையினர் தாக்குதல் நடத்திவருகின்றனர்.

படையினரின் இந்த மும்முனைத் தாக்குதல்களை எதிர்த்து புலிகள் உக்கிர தாக்குதல்களை நடத்திவருகின்றனர்.

கடந்த இரு நாட்களாக நடைபெற்ற சண்டையில் படையினர் தரப்பில் பலர் கொல்லப்பட்டும் காயமடைந்துமுள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## எண்ணாயிரம் தொண்டர் ஆசிரியர்கள் நியமனம்

(கொழும்பு)

எண்ணாயிரம் தொண்டர் ஆசிரியர்கள் விரைவில் நியமனம் செய்யப்படுவர் என கல்விச்சேவைகள் சபையின் செயலாளர் ஏ. எஸ். வீரரத்ந தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; 6 ஆயிரம் தொண்டர் ஆசிரியர் ஏற்கனவே நியமிக்கப்பட்டதாகவும் ஏனைய ஆயிரம் பேர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் போன்ற இடங்களிலிருந்து நியமிக்கப்படுவரெனவும் மேலும் 1000 பேர் மேல் விசாரணைகள் விசாரணைசெய்யப்பட்ட பின்னர் அடுத்த மூன்று மாதத்துள் நியமிக்கப்படுவரெனவும் தெரிவித்தார்.

தொண்டர் ஆசிரியர் நியம

[4ம் பக்கம் பார்க்க]

## நிரந்தர ஆசிரியர்களுக்கு சம்பளம் உயர்வு

(யாழ்ப்பாணம்)

தற்போது சேவையில் இருக்கும் நிரந்தர ஆசிரியர்களின் அதிகுறைந்த சம்பளம் 2,750 ரூபாவாக உயர்த்தப்படும். 10 வருட சேவைக்குக் குறைந்த சகல ஆசிரியர்களும் இச்சம்பளத் திட்டத்தில் நியமிக்கப்படுவர்.

கடந்த 28ம் திகதி கல்வி அமைச்சில் நடைபெற்ற சம்பள மீளாய்வுக் குழுக் கலந்துரையாடலில், இச்சம்பளத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

மேலும் இக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவுகள் வருமாறு:

10 வருடத்திற்கு மேற்பட்ட பயிற்றப்படாத ஆசிரியர்களும், 6 வருடத்திற்குக் குறைந்த பயிற்றப்பட்ட ஆசிரியராகச் சேவை செய்தவர்களும் ரூபா 3,000/-, ஆரம்பச் சம்பளமாக உள்ள ஆசிரியர், சேவை வகுப்பு-4ல் நியமிக்கப்படுவர்.

6 வருடத்திற்குக் கூடிய பயிற்றப்பட்ட ஆசிரிய சேவை உடையவர்களும், 7 வருடத்திற் குறைந்த சேவையுடைய

(4-ம் பக்கம் பார்க்க)

## பொதுமக்கள் இடம்பெயர்வு பல வீடுகள் தீமூட்டி எரிப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் தொடர்சியாக நடைபெறும் தாக்குதல்களினால் பல வீடுகள் தரைமட்டமாகியுள்ளதுடன் பல வீடுகள் இராணுவத்தால் தீமூட்டி எரிக்கப்பட்டன அச்சத்தின் காரணமாக பொதுமக்கள் பெருமளவில் இப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

பொதுமக்கள் குடியிருக்கும் பகுதிகளில் விமானப்படை

(4ம் பக்கம் பார்க்க)

## பிரதேச விஸ்தரிப்புக்கான இராணுவ நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்குப்பகுதிகளில் பெருமளவு பிரதேசத்தை படையினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதே தற்போதைய இராணுவ நடவடிக்கைகளின் நோக்கம் என்று இராணுவப்பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்கா தெரிவித்துள்ளார்.

இந்நோக்கத்திற்காக மும்முனைத் தாக்குதல்கள் குறிப்பிடப்பட்ட இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள இராணுவம், நேற்று மாலை 6-00 மணியிலிருந்து யாழ். நகரின் கரையோரப் பகுதிகளை நோக்கிப் பலத்த ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இதேவேளை, பலாலி இராணுவ முகாமிலிருந்தும் பரவலான ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## தென்னாபிரிக்காவில் தேசிய மொழியாக தமிழ் விரைவில் அங்கீகாரம்

(ஜொகனஸ்பேர்க்)

தென்ஆபிரிக்காவில் விரைவில் 'தமிழ் மொழிக்கும்' தேசிய மொழிக்கான அங்கீகாரம் கிடைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தெ. ஆபிரிக்காவில் உள்நாட்டு மொழிகளுடன் சேர்த்து 4 இந்திய மொழிகளான தமிழ், ஹிந்தி, குஜராத்தி, உருதுஆகியவற்றுக்கு முழு அளவிலான அங்கீகாரம்வழங்குமாறு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் திரு. நெல்சன் மண்டேலா பரிந்துரைத்துள்ளார்.

அரசின் கோரிக்கைக்கேற்பவே இப்பரிந்துரை வழங்கப்பட்டுள்ளதாம். தற்போது தெ. ஆபிரிக்காவில் சுமார் 5 லட்சம் தமிழ் மக்கள் உட்பட 18 லட்சம் இந்தியர் வாழ்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## ஜெயலலிதாவிற்கு எதிராக தி.மு.க. பெரும் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க. அரசுக்கு எதிராக தமிழ்நாடு முழுவதும் பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்போவதாகத் திராவிட முன்னேற்றக் கழகம் தீர்மானித்துள்ளது.

திராவிட இயக்கத்தின் கொள்கைகளை, பதவியில் இருக்கும் அ.தி.மு.க. அரசு குழிதோண்டிப் புதைத்து விட்டதாகத் திராவிட முன்னேற்றக் கழகம் குற்றம் சாட்டியுள்ளது.

இந்த ஆர்பாட்டம் எப்பொழுது நடத்துவதென்பது குறித்துத் திட்டவட்டமாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் எதிர்வரும் 25ம் திகதி செல்வி ஜெயலலிதா தமிழக முதலமைச்சராகப் பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியாவதால், அன்றைய தினமே ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## வரி விளம்பரம்

**வைத்தியம்**

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு. வெள்ளைக்கசிவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணைவைத்தியர் சி இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(சி 6319)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


## விதை நெல் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் காலபோகத்திற்குத் தேவையான விதைநெல்லில் ஒரு பகுதியை கமநலசேவை நிலையங்களூடாகக் கொள்வனவுசெய்வதற்கான ஏற்பாடுகளை அரச அதிபர் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு கமநலசேவை நிலையமும் பி. ஜீ. 350, பி. டபிள்யூ. 351 ஆகிய நெல்லின விதைகளை மட்டும் 100 புசல்கள் வரையில் கொள்வனவுசெய்வதற்கும், தரமான விதைநெல்லினை ஒரு புசல் 1200/-படி கொள்வனவுசெய்வதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## ஜெர்மனியில் அகால மரணம்

(ஆனைப்பந்தி)

புங்குடுதீவைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் ஜெர்மனியில் அகால மரணமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு 11ம் வட்டாரத்தைச் சேர்ந்த ஆறுமுகம் நவரெத்தினம் என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

கடந்த மாதம் 30ம் திகதி சனிக்கிழமை இவர் விபத்தொன்றில் சிக்கி மரணமடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது (101)

## "உலக அறிவு கல்விக்கு உறுதுணையாகும்"

[யாழ்ப்பாணம்]

உலக வாழ்க்கையை அறிந்தாலன்றிக் கல்வி மனிதனுக்கு உற்ற துணையாகாது. மாணவர்களுக்குச் சமூக வாழ்க்கையில் ஈடுபாடு கொள்வதற்குரிய பயிற்சியை, அனுபவத்தை வித்தியாலயங்களில் நடைபெறும் ஒன்றுகூடல் நிகழ்ச்சிகள் தருகின்றன.

இவ்வாறு பட்டுவில் மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற உயர்தர மாணவர் ஒன்றியத்தின் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட கலாநிதி சபா. ஜெயராசா கூறினார்.

மாணவர் தலைவர் செல்வன் க. சுதாகர் தலைமையில் ஒன்றுகூடல் நிகழ்ச்சி நடந்தது.

இதனை முன்னெடுத்து நடத்தி சாதி, சமய, ஏற்றத் தாழ்வு வேறுபாடுகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்த அதிபர் அ பொ செல்லையாவின் நிருவாகத் திறமையைக் கலாநிதி ஜெயராசா பாராட்டினார்.

தென்மராட்சி கல்விக் கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு ச. சின்னத்தம்பி தென்மராட்சி மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் புரட்சி ஆகியோரும் இவ்வைபவத்தில் உரையாற்றினர்.

## நல்லூர் கந்தன் திருவிழா

[யாழ்ப்பாணம்]

நல்லூர் கந்தசாமி கோயில் வருடாந்த உற்சவம் ஆகஸ்ட் மாதம் 3ம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 25 நாட்கள் திருவிழா நடைபெற்று 26ம் திகதி ரதோற்சவமும் 27ம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

## ஓராண்டு பூர்த்தி

[யாழ்ப்பாணம்]

நாவாந்துறை வசந்தபுரம் அன்னை சனசமூகநிலையத்தில் நடைபெற்றுவரும் தியாகி திலீபன் பாலர் பாடசாலை சிறுவருக்கான மதிய உணவு திட்டமும் பாடசாலைபொறுப்புகளும் மெதடிஸ் திருச்சபையினரால் பொறுப்பேற்று இன்றுடன் ஓராண்டு பூர்த்தியாகின்றது.

## நீராவியடி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீராவியடி ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் 5ம் திகதி வெள்ளிக்கிழமை காலை சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 14ம் திகதி வரை நடைபெறும் உற்சவத்தின்போது தினமும் விஷேட நாதஸ்வரஇசையுடன் சுவாமி வீதியுலா இடம்பெறும்.

## இராசிபலன்

03 06-1992

புதன்கிழமை

(தமிழுக்கு வைகாசி 21)

துதியை காலை 6-39 வரை: திருவாதிரை மாலை 6-39 வரை சித்தயோகம் இராகுகாலம் காலை 11-52 முதல் 1-52 வரை சுபநேரம் மாலை 4-22 முதல் 5-52 வரை.

மேடம்: கல்வித் திறமை, மித்திர லாபம், குடும்ப சுகம்.

இடபம்: மனத் துன்பம். தொழில் நஷ்டம், அலைச்சல்.

மிதுனம்: காரிய சித்தி, சுற்றத்தார் வருகை. பணவரவு.

கடகம்: மனையாள் பகை, தொழில் ரோ டி, அசதி

சிங்கம்: ஆடம்பரச்செலவு, பகவர் நட்பு, வாய்த்தர்க்கம்,

கன்னி: நினைவு குன்றுதல், முரண்பாடு, வைத்தியசெலவு,

துலாம்: மனக்குறை, புத்திர சோகம், யோசனை.

விருச்சிகம்; வாக்குக் கலகம், பதற்றம், பணமுடை.

தனுசு: எதிர்பாராத உதவி, பகை அகலும், மனமகிழ்ச்சி.

மகரம்: தெய்வீகப் பணி, சகோதர உதவி பயணம்

கும்பம்: குடும்பப் பகை, ஏமாற்றம், உறவினர் வெறுப்பு.

மீனம்: அவசர முடிவு, உடல் உபாதை; மனச் சஞ்சலம்.

— ஜோஸ்யர்


# வொண்டலைற் சலவைப் பவுடர்

யாழ்ப்பாண நீருக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டது.

**வொன்டலைற் சோப்பவுடர் மட்டுமே!**

எம்மிடம்

**தலையணைப் பஞ்சு - நுளம்புத்திரி**

இவைகளை

மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு தகுந்த கழிவு கொடுக்கப்படும்.

**புஸ்பா அன் கம்பனி,**
**293, மானிப்பாய் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(எ-2179)



# 2 வது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வன் நிசானந்தன்

நாவற்குழியைச் சேர்ந்த ஆனந்தராசா விஜயலட்சுமி தம்பதிகளின் செல்வப்புதல்வன் நிசானந்தன் இரண்டாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் இன்று குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அம்மா, அப்பா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியம்மாமார், பெரியப்பாமார், மாமன்மார், மாமிமார், அன்ரி, அண்ணன்மார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தெருவடியான் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

நாவற்குழி கிழக்கு,
நாவற்குழி.

(சி-6365)



**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை**

## பொதுப்பட்டமளிப்பு 1992-09-05ƒ

டிப்ளோமாக்கள் / பட்டங்கள் / பட்டப்படிப்பின் டிப்ளோமாக்கள் முதுமாணி/கலாநிதி ஆகிய பட்டங்களை அளிப்பதற்காக 1992-09-05 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொதுப் பட்டமளிப்பு நடைபெறும். பின்வரும் தேர்வுகளில் சித்தியடைந்தோர் 30-06-92க்கு முன்னர் தமது வேண்டுகோளை விடுத்தல்வேண்டும்.

01. கலாநிதித் தேர்வு
02. முதுதத்துவமாணித் தேர்வு
03. முதுகலைமாணித் தேர்வு
04. முது விஞ்ஞானமாணித் தேர்வு
05. கல்விப் பட்டப்படிப்பின் டிப்ளோமாத் தேர்வு 1990
06. வைத்தியமாணி, சத்திர சிகிச்சைமாணித் தேர்வு 1990
07. வணிகமாணித் தேர்வு 1990
08. தொழில் நிர்வாக மாணித் தேர்வு 1990
09. சிறப்பு விஞ்ஞான மாணித் தேர்வு 1990
10. சிறப்பு கலைமாணித் தேர்வு 1990
11. பொது விஞ்ஞான மாணித்தேர்வு 1990
12. பொதுக்கலைமாணித் தேர்வு 1990
13. சங்கீதம்/பரதநாட்டியம், டிப்ளோமாத் தேர்வு 1990
14. சித்த வைத்திய மாணி, சத்திர சிகிச்சை மாணித் தேர்வு

விண்ணப்பங்களை மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக அனுப்பிவைத்தல் வேண்டும். வேண்டுகோட் படிவங்களையும் மற்றும் விபரங்களையும், முத்திரை ஒட்டிய 23X10 செ.மீற்றர் அளவுடைய, சுயமுகவரியிட்ட கடித உறையை உப பதிவாளர் / தேர்வுகள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு அனுப்பியோ அல்லது வழமையான வேலைநேரங்களில் தேர்வுக் கிளைக்கு நேரடியாக வந்தோ பெற்றுக்கொள்ளலாம். குறிப்பிட்ட திகதிக்கு கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்.**

(ஏ-2187)


## இன்று

(பண்டத்தரிப்பு)

பண்ணாகம் வடக்கு அமெரிக்க மிஷன் த. க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று 3ம் திகதி புதன்கிழமையன்று பாடசாலை அதிபர் திரு. வ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பிரதம அதிதியாக பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு க. மகேசனும், சிறப்பு விருந்தினராக பண்டத்தரிப்பு கொத்தணி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரமும் கலந்து கொள்வார்கள். (72)

0 0 0

(கிளிநொச்சி)

தனியார் பாடசாலையாக இருந்து 92 ஜனவரி 1ம் தேதி முதல் அரசினரால் பொறுப்பேற்கப்பட்ட கிளிநொச்சி சிவபாதக் கலையகம் பாடசாலையின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் நடேசன் தம்பிராசா தலைமையில் நடைபெறுகின்றது.

பிரதம விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் சு. தர்மரத்தினம் கலந்து சிறப்பிக்கவிருக்கின்றார். (83)

## திருமுறைப் பெருவிழா

[வட்டுக்கோட்டை]

நல்லை. ஸ்ரீசட்டநாதசுவாமி ஆலயத்தில் திருஞானசம்பந்தர் குருபூசைத்தினத்தன்று அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரால் திருமுறை விழா கொண்டாடப்பட்டது. (139)


# மில்க்வைற் நிறுவனமும் ஐக்கியநாடுகள் சங்கம், யாழ். கிளையும்

தங்கள் அழைப்பை ஏற்றுப்
பூமியின் பாதுகாப்பில் அக்கறை காட்டி
"பூமியைப் பேணுவதற்கான
திடசங்கற்பத்"தில்
பங்கேற்ற அனைவர்க்கும் தங்கள்
இதயபூர்வமாக நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறார்கள்.

இப்புனித கைங்கரியத்தில் கலந்துகொள்ளத் தவறியவர்கள், நேரில் தொடர்பு கொண்டு மில்க்வைற் நிறுவனத்தில் திடசங்கற்பம் ஏற்றுக் கொள்ளும்படி அழைக்கப்படுகிறார்கள்.

(ஏ-2188)

# லலித் - காமினிக்கு இந்தியா ஆதரவளிப்பது 'பிரேமா' அரசை கவிழ்க்கும் சதித்திட்டம்

## - 'இந்து' பத்திரிகை விமர்சிக்கிறது -

(சென்னை)

புலிகள் இயக்கத்திற்கு இந்தியாவில் தடைவிதிக்கப்பட்ட பின்னர், இலங்கையில் இந்திய ராஜதந்திரம் மிகவும் சிக்கல்வாய்ந்த நிலைமை ஒன்றை எதிர்நோக்குவதாக இந்தியாவின் பிரபல பத்திரியான 'இந்து' தெரிவித்துள்ளது.

'இந்து' மேலும் தெரிவிக்கையில்; இலங்கையின் வடக்கு கிழக்கில் சமாதானம் அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை குலைப்பதாக கொழும்பினால் குற்றஞ்சாட்டப்படக்கூடிய ஒரு அபாயத்தை புதுடில்லி எதிர்நோக்குகின்றது.

வடக்கு-கிழக்கில் அமைதியை ஏற்படுத்துவதற்கு இலங்கையில் மேற்கொள்ளப்படும் அரசியல் நடவடிக்கைகள் தோல்வி அடையுமிடத்து அதற்கான பொறுப்பு இந்தியாவே என்று குற்றஞ்சாட்டப்படக்கூடிய சூழ்நிலையைத் தவிர்த்துக்கொள்வதை உறுதி செய்வதும் பிரேமதாஸாவின உள்நாட்டுப் பிரச்னைகளுக்கு பொறுப்பான 'வில்லன்' இந்தியாவே என்ற குற்றச்சாட்டிலிருந்து தப்பிக்கொள்வதை உறுதிசெய்வதுமே இந்தியக்கொள்கையை இன்று எதிர்நோக்கும் பாரிய ராஜதந்திரச் சவால்களாகும்.

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதன் மூலமாக அவ்வியக்கத்திற்கு சட்டபூர்வத்தன்மை ஒன்றை கொடுக்கவேண்டாம் என்ற தொனியில் இந்தியா சூசகமாக தெரிவிக்கும் கருத்துக்கள் சமாதான முயற்சிகளை முறியடிப்பதற்கும் பிரேமதாஸா நிர்வாகத்தை உறுதிகுலையச்செய்யவும் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் என்றே நோக்கப்படுகின்றன.

இலங்கை அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் ஒரு முயற்சியாக சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் காமினி திசநாயக்கா மற்றும் லலித் அத்துலத்முதலி தலைமையிலான அதிருப்தியாளர் குழுவுக்கும் இந்தியா ஆதரவு தருகின்றது என்று இலங்கை அரசாங்கத்திற்குள் இருக்கும் பலர் நம்புகிறார்கள்.

எதிரணியினருக்கு இந்தியா கொடுக்கும் இந்த ஆதரவும் புலிகள் மீதான இந்தியாவின் தடையும் பிரேமதாஸா அரசாங்கத்தை வீழ்த்துவதற்கான ஒரு சதித்திட்டத்தின் அங்கமாக நோக்கப்படுகின்றது.

இவ்வாறானதொரு நிலைமை தொடருமானால் அது இந்திய இலங்கை உறவில் விரிசல் நிலை ஒன்றை ஏற்படுத்தும். இந்த அச்சத்தை போக்கும்விதத்தில் இந்தியா நடந்துகொள்ளத் தவறுமானால் புலிகள் பிரேமா கூட்டு மேலும் வலுப்படலாம் எனவும் குறிப்பிட்டுள்ளது. (சி)

---

## ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடத்தும்

(கொழும்பு)

மட்டக்களப்பில் இராணுவ நடவடிக்கையினால் காணாமல் போனோர், கடத்திச் செல்லப்பட்டோர் தொடர்பாக நாளை 4ம் திகதியும், 5ம் திகதியும் விசாரணை நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக விசாரணை செய்ய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகளுக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவரும், முன்னாள் நீதியரசருமான டி. சொய்சா நேரில் சென்று இவ் விசாரணைகளை மேற்கொள்வார்.

காணாமற் போனோரின் உறவினர்கள், கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள் நேரடியாக ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்படுவர். (ரி)

---

## மணலாறில் மீண்டும் உக்கிர மோதல்

(யாழ்ப்பாணம்)

மணலாறுப் பகுதியிலிருந்து முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் கடும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கும் படைகளுக்கும் நேற்று மீண்டும் கடும்சண்டை ஆரம்பமாகியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பீரங்கி, ஷெல், குண்டு வீச்சு விமானத் தாக்குதல்களும் படையினருக்கு உதவியாக இடம்பெற்றன. (56)

---

## எதிர்க்கட்சிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு தீர்வுகாண தன்னுடன் ஒத்துழைக்குமாறு ஜனாதிபதி ஆர். பிரேமதாசா, எதிர்க்கட்சிகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

போரைச் சாட்டாகவைத்து அரசு அவசரகால சட்டத்தை நீடித்து எதிரணியினருக்கு கூட்டம் நடத்தவும், தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கவும் தடைவிதிப்பதனை எதிர்த்து எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தவும் தீர்மானித்துள்ளன.

அதனாலேயே ஜனாதிபதி பிரேமதாசா போரை முடிவுக்குக் கொண்டுவரவும் சமாதானத்தை நிலைநிறுத்தவும் எதிர்கட்சிகளின் உதவியை நாடி கோரிக்கை விடுத்திருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளார். (கே)

---

## அகதிகள் பாதிப்பு

(அரியாலை)

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து கிளாலியில் குடியேறியுள்ள மெலிஞ்சிமுனை நாராந்தனை, கரம்பன், ஊர்காவற்றுறை, தம்பாட்டி முதலிய இடங்களைச் சேர்ந்த அகதிகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இவர்களுக்கு கடந்த மாதம் 10ம் திகதிக்கு முன்பு நிவாரணப் பொருட்கள் வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது. (59)

---

## விளையாட்டுப் போட்டியில் மட்டுவில் கொத்தணி முதலாமிடம்

[யாழ்ப்பாணம்]

தென்மராட்சி கல்விக் கோட்ட விளையாட்டுப் போட்டி மட்டுவில் மகாவித்தியாலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. சிவகுருநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

மட்டுவில் கொத்தணி முதலாம் இடத்தையும், சாவகச்சேரி நகர்க் கொத்தணி இரண்டாம் இடத்தையும், சாவகச்சேரி வடநகர்க் கொத்தணி மூன்றும் இடத்தையும் பெற்றன.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் திரு அ. துரைராசா முதன்மை விருந்தினராக இதில் கலந்துகொண்டார்.

---

## 3000 குடும்பங்கள் அகதிகளாக தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்குப் பகுதியில் இராணுவம் கடந்த சில நாட்களாக மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளினால், 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மல்லாகம், துர்க்காபுரம், பன்னாலை, தெல்லிப்பழை ஆகிய பகுதிகளிலிருந்து மேற்படி குடும்பங்கள் வெளியேறி, தற்போது அளவெட்டிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 6 தற்காலிக முகாம்களில் தங்கியுள்ளன.

துர்க்கையம்மன் கோவில் பகுதியில் உள்ள அகதிகள் முகாம்களில் தங்கியிருந்த 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள், விமானக் குண்டு வீச்சின் பாதிப்பினால் வெவ்வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளன.

மேற்படி அகதிகள் முகாம்களைத் தற்போது பராமரித்து வரும் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள் அகதிகள் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்; "துர்க்கையம்மன் கோவில் குண்டு வீச்சின்போது, கணவன் கண் முன்னால் மனைவியின் உடல் துண்டுதுண்டாகச் சிதறியதையும், தாய்-தந்தையர் முன்பாகப் பிள்ளைகளின் உயிர் பிரிந்ததாலும், அகதிகள் தற்போது கூட்டாக ஒரு முகாமில் இருப்பதற்கு அச்சம் அடைவதாகவும் தெரிவித்தனர். (வி)

---

அம்புலன்ஸ் சேவை

## நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளையிலிருந்து கடமையாற்றிவந்த அன்புலன்ஸ் வண்டி அப்பகுதிச்சேவையை நிறுத்திக்கொண்டது.

மானிப்பாய்ப வத்தியசாலையிலிருந்து அதன்சேவையை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்கட்காகவே தெல்லிப்பளைப் பகுதிச் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாம். பலதடவை படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகியதும் தெரிந்ததே. (56)

---

## யசீர் அரபாத்திற்கு மூளையில் சத்திர சிகிச்சை

(அம்மான்)

பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் தலைவர் யசீர் அரபாத்துக்கு மூளையில் ஏற்பட்ட ரத்தக்கட்டி ஒன்றை நீக்குவதற்காக அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டது.

ஜோர்தானிலுள்ள அம்மான் நகரத்து மருத்துவ மனையில் நடத்தப்பட்ட இந்த சத்திர சிகிச்சை வெற்றிகரமாக நடந்துமுடிந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் திங்களில் அவர் பயணம்செய்த விமானம் பாலைவனப் புயலில் சிக்கி லிபியாவில் தரையிறக்கப்பட்டதை அடுத்து ஜனாப் அரபாத்தின் மனநிலை குழப்பமடைந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (கே)

---

## பாரிஸ் விநாயகருக்கு இன்று கும்பாபிஷேகம்

(பாரிஸ்)

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் அமைந்துள்ளஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

இன்று நண்பகல் 12-30 முதல் 1-30 வரையிலான சுப முகூர்த்தத்தில் கும்பாபிஷேக கிரியைகள் நடைபெறும்.

இதனையொட்டி கடந்த திங்கள் முதல் கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து தினமும் விஷேட அபிஷேகங்கள் நடைபெற்று 7ம் திகதி இரவு திருவிளக்கு வழிபாடும் இடம்பெறும். (சி)

---

## "நிலப்பகுதியை பேணிப் பாதுகாப்பது அவசியம்"

(யாழ்ப்பாணம்)

"நாம் இந்த நிலப்பகுதியைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். 145 நாடுகளைச் சேர்ந்த பல்துறைத் தலைவர்கள் யூன் மூதாம் திகதி பிறேசிலில் கூடி, இந்தப் பூமியைப் பாதுகாக்கவேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டு, உறுதிப் பத்திரத்தில் கையெழுத்திடுகிறார்கள். அவர்கள் போன்று நாமும் இந்த நிலப்பகுதியை பாதுகாக்க திடசங்கற்பம் செய்வோம்."

இவ்வாறு மில்க்வைற் அலுவலக யூபிலி மண்டபத்தில் நடைபெற்ற சுற்றுச்சூழல் அபிவிருத்திதின வைபவத்தில் ஐ. நா. சுற்றுச்சூழல் அபிவிருத்தி சபையின் பிரதிநிதியாக கலந்துகொண்ட திரு. சதிர்காமநாதன் கூறினார்.

விழாவுக்கு தலைமை வகித்த மில்க் வைற் அதிபர் க. கனகராசா கூறியதாவது: மண்ணுலகத்தில் வாழும் நாம் இந்த நிலப்பகுதியை பேணிப்பாதுகாப்பது அவசியமாகும்.

கரையோர நிலப்பரப்பை கடல்கொள்ளும் அபாயநிலை, ஆறு, குளம் போன்றவற்றில் வண்டல்சேருதல், அழுக்குநீர், மரங்கள் புனர்நடுகை மேற்கொள்ளப்படாதல் கட்டுப்பாடற்ற முறையில் களைகொல்லி, பூச்சிநாசினி பாவித்தல், புகை கக்கும் தொழிற்சாலைகள் ஏற்படுத்துதல் போன்ற கேடுகள் எம்முன்னே உள்ளன. இவைகளைநீக்கி எமது வளவுகளிலும், வெறுங்காணிகளிலும் பயன்தரும் மரங்களை நாட்டவேண்டும் என்றார்.

விழாவில் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் ஜோசப் அடிகளார், கலாநிதி கணேசலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர். (சு)

---

## ஆலயம் மீது குண்டு வீச்சு: இந்துவாலிபர் சங்கம் பலத்த கண்டனம்

(பண்டத்தரிப்பு)

தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலுக்கு பண்டத்தரிப்பு இந்து வாலிபர் சங்கம் பலத்த கண்டனம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

யுத்த காலத்தில் ஆலயங்கள், பாடசாலைகள் ஆகியவற்றின் மீது தாக்குதல்கள் நடாத்தப்படுவது சர்வதேச ரீதியில் தவிர்க்கப்பட்டு வருவது வழக்கமென்றும், இங்கு கண்மூடித்தனமாக ஆலயங்கள் மீது குண்டு வீச்சு நடாத்தி மக்களைப் படுகொலை செய்திருப்பது கண்டிக்கப்படவேண்டியதொன்றாகும் என்றும் இத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (72)

---

### யாழ். சுகாதாரத் திணைக்களத்தில்

## 22 புதிய அமைய எழுதுவினைஞர் நியமனம்

(பண்டத்தரிப்பு)

யாழ். சுகாதார திணைகளத்தில் 22 புதிய அமைய எழுதுவினைஞர்கள் கடந்த மாதம் 18ம் திகதி தொடக்கம் நியமனம் பெற்றுள்ளார்கள். இவர்களில் 12 பேர் யாழ். பிராந்திய சுகாதாரசேவைப் பணிப்பாளர் பணிமனையிலும் மிகுதிப்பேர் கோப்பாய், சாவகச்சேரி, பருத்தித்துறை, மானிப்பாய், ஊர்காவற்றுறை ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களிலும் நியமிக்கப்பட்டுள்ளார்

(4-ம் பக்கம் பார்க்க)

## மனித நேயமற்ற

# இராணுவ நடவடிக்கைகளுக்கு இந்து மன்றம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா அரசானது வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் வாழும் தமிழ்மக்களின் உயிர்கள், உடைமைகள், வழிபாட்டுத் தலங்கள் என்பனவற்றின் மீது கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலினாலும், எறிகணை வீச்சுக்களினாலும் வேண்டுமென்றே திட்டமிட்ட முறையில் அழித்துவருவதனை யாழ் பல்கலைக்கழக இந்துமன்றம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக இந்து மன்றம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்துக்களின் பிரசித்தி பெற்ற வரலாற்று வழிபாட்டுத் தலங்கள் முற்றாக அழிக்கப்படுவதோடு தென் தமிழீழப் பகுதிகளில் தீயசக்திகளால் பலாத்காரமாக இந்துக்கள் மதமாற்றம் செய்யப்பட்டும் வருகின்றனர். இவ்வாறான முயற்சியானது இந்துக்களின் கலாச்சாரத்தையே பாதிப்படையச் செய்கிறது.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்கட்டிச்சோலை என்னுமிடத்தில் அமைந்துள்ள தாந்தாமலை சிவன்கோயிலை பௌத்தஆலயமாக மாற்ற முற்பட்டமையும், முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயம், தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானம் ஆகியவற்றின் மீது இடம்பெற்ற கொடூரமான குண்டுத்தாக்குதல்களையும் பல இந்து ஆலயங்கள் முஸ்லிம் காடையர்களினால் அநாகரிகமான செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டமையையும் எம் மன்றம் வன்மையாகக் கண்டிக்கிறது. அகதிகள், அனாதைகள், அடியவர்கள் என்று கோவிலில்வழிபாடியற்றிக் கொண்டிருந்தவர்களின மீது வேண்டுமென்றே நிகழ்த்தபட்ட குண்டு வீச்சினால் பல உயிர்கள் பலியாகி உள்ளமை மிகவும் கண்டிக்கப்படட வேண்டியதொன்றாகும். குறிப்பாக அனாதைச் சிறுவர்களின் நிறை வாழ்வு இல்லமாகவிளங்கிய துர்க்காதேவிஆலயத்தின் மீது விழுந்த குண்டு தமிழீழ மக்களுக்குப் பெரும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களையும், மனித நேயமற்ற இராணுவ நடவடிக்கைகளையும் எமது இந்துமன்றம் மிகவன்மையாகக் கண்டிக்கின்றது. (மா)

## மரண அறிவித்தல்

### திரு. வீரசிங்கம் தர்மசங்கரி

(முன்னாள் கல்வி அதிகாரி)

அச்சுவேலியைச் சேர்ந்த திரு. வீரசிங்கம் தர்மசங்கரி 30-05-92 சனிக்கிழமை கனடாவில் காலமானார். அன்னார் முன்னைநாள் புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி அதிபர் காலஞ்சென்ற திரு. வீரசிங்கம் இரத்தினம் தம்பதியினரின் மூத்த புதல்வரும், கனகநாயகி அவர்களின் அன்புக் கணவரும், திருவாளர்கள் கனகசங்கரி, சிவசங்கரி, நகுலசங்கரி, உதயசங்கரி, விஜயசங்கரி, செல்வி கவிகேந்திரி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திரு. கணேசசங்கரி, காலஞ்சென்ற இராஜசங்கரி (சட்டத்தரணி), திரு. ஆனந்தசங்கரி (முன்னாள் கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர்), திரு. சகாதேவசங்கரி (மக்கள் வங்கி, யா/கன்னாதிட்டி), திருமதி மதிபாபரணம் ஞானசம்பந்தன், திரு. பரதசங்கரி, காலஞ்சென்ற ஞானசங்கரி, காலஞ்சென்ற திருமதி மங்கையர்க்கரசி ஜெயசீலன், திருமதி லோகநாயகி இரத்தினம், திருமதி திருநல்நாயகி கதிர்காமசோதி, திரு துருவசங்கரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள், இன்று 03-06-92 புதன்கிழமை கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:<br>
வி. சகாதேவசங்கரி<br>
(சகோதரர்).

சிவன்கோவிலடி,<br>
திருநெல்வேலி தெற்கு,<br>
யாழ்ப்பாணம்.

(சி 6382)

### திருமதி பாக்கியம் சின்னையா

திருமதி பாக்கியம் சின்னையா அவர்கள் 02-06-92 செவ்வாய்க்கிழமை மகிமைக்குள் பிரவேசித்துவிட்டார். அன்னார் திரு. க. அ. சின்னையா (ஸ்தாபகர் க. அ. சின்னையா அன் சன்ஸ்) அவர்களின் அருமை மனைவியாரும், அ. சி. ஜெபரத்தினம் [டேவிட், பிரதம பங்காளி சின்னையா அன் சன்ஸ்], திருமதி புளோறன்ஸ் ராஜசிங்கம், அ. சி. ஜீவரத்தினம் [சாம், பங்காளி சின்னையா அன் சன்ஸ்], சி. ஜெயரத்தினம் [ஜேக்கப், இளைப்பாறிய புகையிரதத் தொழிற்சாலை உயர் அதிகாரி டவுண் சைட், வேவெல்ச குறூப் பதுளை, தற்போதைய பங்காளி சின்னையா அன் சன்ஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும் தா. சா. ராஜசிங்கம் (இளைப்பாறிய பெருந்திணைக்கள அதிகாரி, கொழும்பு] அருள், பிறேமா, ராஜி ஆகியோரின் அருமை மாமியாரும் கீதாஞ்சலி [கொங்கொங் வங்கி கொழும்பு], சுகந்தராஜ் (மருத்துவத்துறை மாணவன் ஜேர்மனி), சுகந்தினி (முன்னாள் உடுவில் மகளிர் கல்லூரி மாணவி வெலன்ரீனா (உடுவில் மகளிர் கல்லூரி], டில்மினா (வேம்படி மகளிர் கல்லூரி). குமுதினி (உடுவில் மகளிர் கல்லூரி) சுஜீவன் (சென்ஜோன்ஸ் கல்லூரி], ஜீவக்குமார் (யாழ். மத்திய கல்லூரி), சாளினி [உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அருமைப் பேத்தியாருமாவார். அன்னாரின் அடக்க ஆராதனை வியாழக்கிழமை (04 06-92) காலை 8-30 மணிக்கு சுபாஸ் வீதியிலுள்ள (கொத்துக்கட்டி வீதி] அன்னாரது இல்லத்தில் இடம் பெற்று கல்லுண்டாய் பெந்தகோஸ்தே, சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் தயவுடன் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சுபாஸ் வீதி (கொத்துக்கட்டி வீதி)<br>
நவாலி தெற்கு,<br>
மானிப்பாய்.

தகவல்:<br>
அ.சி. ஜெபரத்தினம்<br>
(மகன்)

சி-6338

### நிரந்தர

[1-ம் பக்கத்தொடர்ச்சி)

பட்டதாரி ஆசிரியர்களும், ரூபா 3,500/- ஆரம்பச் சம்பளமாக உள்ள ஆசிரியர் சேவை வகுப்பு-3ல் நியமிக்கப்படுவர்.

12வருடத்திற்கு மேற்பட்ட பயிற்றப்பட்ட ஆசிரிய சேவை உடையவர்களும், 7 வருடத்திற்கு மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர்களும் ரூபா 4,600/- ஆரம்பச் சம்பளமாக உடைய ஆசிரிய சேவை வகுப்பு-2ல் நியமிக்கப்படுவர்.

20 வருட பயிற்றப்பட்ட ஆசிரிய சேவையடைவர்களும் 14 வருட சேவையுடைய பட்டதாரி ஆசிரியர்களும் ரூபா 6000/- ஆரம்பச் சம்பளமாக வுள்ள ஆசிரிய சேவை வகுப்பு 1-ல் நியமிக்கப்படுவர்.

புதிய திட்டத்தின் அடிப்படையில் ஆசிரியரின் அதி குறைந்த சம்பளம் ரூபா 2750/- ஆகவும். அதிஉயர்ந்த சம்பளம் ரூபா 9000/- ஆகவும் அமைந்துள்ளது. ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர் 30 வருட சேவை முடிக்கும் பொழுது அதி உச்சச் சம்பளமாகிய ரூபா 9000/-த்தைப் பெறுவார். ஒரு பட்டதாரி ஆசிரியர், 24 வருட சேவையில் அதி உச்சச்சம்பளமாகிய ரூபா 9000/-ப் பெறுவார்.

சம்பளத்திட்டம் தற்போது சேவையிலிருக்கும் ஆசிரியர்களுக்கு மாற்றியமைக்கப்படும் போது சேவைமூப்புக்கேற்ப சம்பளப் படியுயர்சியும் வழங்கப்படும்.

பயிற்றப்பட்ட ஆசிரியர் பட்டதாரி ஆவதன் மூலமும், பட்டதாரிகள் கல்வி டிப்புளோமாப் பட்டம் பெறுவதன் மூலமும் அல்லது பல்கலைக் கழகங்களில் இரண்டாம்நிலைப் பட்டங்களாகிய முதுமாணிப் பட்டத்தைப் பெறுவதன் மூலமும் குறுகிய காலஇடைவெளியில் அடுத்த ஆசிரிய சேவை வகுப்புக்கு சுயமாகவே பதவியுயர்வு பெறுவார்.

தற்போது நியமிக்கப்பட்டிருக்கும்/இவ்வருடம் நியமிக்கப்படவிருக்கும் பயிலுனர் ஆசிரியர்கள், பட்டதாரிப் பயிலுநர்கள் தொழிற்சார் பயிற்சி அளிக்கப்பட்டு முறையே ஆசிரிய சேவை 4லும், 3லும் நியமிக்கப்படுவர். எனினும் எதிர்காலத்தில் பயிலுனர்கள் என்ற ரீதியில் என்றும் நியமிக்கப்படமாட்டார்கள்.

இச்சம்பள மீளாய்வுக்குழுவின்சிபார்சுகளைகல்வி அமைச்சரான ஜனாதிபதி அமைச்சரவையின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிப்பார். (சு)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றம் ஒழுங்கு செய்துள்ள கருத்தரங்குத் தொடரில் 'உள்ளூர் யுத்தத்தின் மத்தியில் பிழைத்து வாழ்வதற்கான மூலோபாயங்கள்' என்ற தலைப்பில் யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவின் உதவித் திட்டப் பணிப்பாளர் திரு.செல்வின் அவர்கள் உரையாற்றவுள்ளார்.

இக்கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். பல்கலைக் கழகப் பொருளியல்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### யாழ். சுகாதார

[3ம் பக்கத் தொடர்ச்சி]

கள்.

யாழ். சுகாதாரத் திணைக்களத்தில் 40 எழுதுவினைஞர்களுக்கு வெற்றிடம் இருந்த போதிலும் 23 பேரே நியமிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (72)

### 6வது முறையாக

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கல் செய்யப்படடிருந்ததால் அவர் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று நேற்று சென்னையில் கூடிய கட்சியின் பொதுக்குழுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

திரு, க. அன்பழகன் பொதுச் செயலாளராகவும், திரு. சாதிக்பாட்சா பொருளாளராகவும் மீண்டும் ஒருமனதாகத்தேர்ந்தெடுக்கப்பட்டனர். திரு. நாஞ்சில் மனோகரன் கட்சியின் துணைப்பொதுச் செயலாளராக மீண்டும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

### தாக்குதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் நடவடிக்கை அதிகாரம் முப்படைத்தளபதிகளுக்கு மாற்றப்பட்ட பின்னர் புதியவர்கள் வடக்கில் ஒருபிடிபிடிக்க பார்த்திருக்கிறார்கள் என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

இவர்களுடைய இந்த தாக்குதல் இறுதித் தாக்குதலுக்கு முந்திய ஒரு வெள்ளோட்ட தாக்குதல் என்று கணிக்கப்படுகிறது.

இந்த தாக்குதல் நடவடிக்கையானது புதியவர்களுக்கு ஒரு பாடமாக அமைந்து விட்டது.

மாபெரும் எடுப்பில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் எதிர்பார்த்தளவு வெற்றியும் கிடைக்கவில்லை அதோடு பாதுகாப்பு படையினருக்கு பலத்த சேதமும் ஏற்பட்டுள்ளது மேற்படி நிகழ்வுகள் இராணுவத்தலைமையகத்தை சிந்திக்க வைத்துள்ளது.

இத்தகைய தாக்குதல் நடவடிக்கைகளை மேலே தொடர்வதா அல்லது ஒத்திபோடுவதா என்ற நிலை முப்படைத் தளபதிகளுக்கிடையில் ஏற்பட்டுள்ளது.

### எண்ணாயிரம்

(1-ம பக்கத் தொடர்ச்சி)

னம் சம்பந்தமாக இதுவரையில் 4000 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டுள்ளதாகவும் மேற்படி நியமனங்களுக்கு எதிராக 50 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் ஆசிரிய நியமனங்கள் இரத்துச் செய்யப்படும் என்றும் தெரிவித்தார். (க)

### பொதுமக்கள்

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

யினரின் தொடர்ச்சியான குண்டு வீச்சினாலும், கடற்படையினரின் பீரங்கித் தாக்குதல்களினாலும் சிலாவத்தை தெற்கு, அலம்பில், உடுப்புக்குளம், செம்மலை, தியோகுநகர் ஆகிய இடங்களில் இருந்தே மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

படையினரின் தாக்குதலுக்கு அஞ்சி உடைமைகளையும், வீடுகளையும் கைவிட்டு பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் சென்றனர்.

அலம்பில் பகுதிகளில் விமானப்படையினரின் அகோரக் குண்டு வீச்சினால் பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் தரை மட்டமானதுடன், பல வீடுகளை இராணுவம் தீயிட்டுக் கொளுத்தியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி-56)

### பிரதேச

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

தரை மார்க்கமாக நகரும் படையினருக்கு உதவியாக விமானப்படையினர் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தற்போதைய நடவடிக்கையின் போது புலிகள் தரப்பிலிருந்து கடும் எதிர்ப்பை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (மா-ரி)

### 2வது நாளாக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கனரக வாகனங்கள் சில புலிகளின் தாக்குதலினால் அழிக்கப்பட்டன.

அலம்பிலில் விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா படையினருக்கும் இடையில் கடும் யுத்தம் நடைபெற்றதாகவும் இராணுவதரப்பில் பெருமளவு படையினர் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் ஊர்ஜிதப்படுத்தின.

நேற்றுமுன்தினம் அலம்பிலில் நடைபெற்ற மோதலில் ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் இதில் மூவர் இராணுவ வைத்திய பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது.

விடுதலைப்புலிகள் வைத்த கண்ணிவெடியில் அகப்பட்ட பல இராணுவத்தினர் பலத்த காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது (மா-க-56-வி)

## ஓர் அவசர அழைப்பு

கடந்த 31-05-1992 ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் அரசுப்படையினரால் கண்மூடித்தனமாக நடாத்தப்பட்ட அராஜகத் தாக்குதல்களைக் கண்டித்து, எதிர்க்கும் நோக்கோடு எடுக்கப்படவேண்டிய தொடர் நடவடிக்கைகள் குறித்துக்கருத்துக்களை ஒன்று திரட்டு முகமாக இன்று (03-06-92 புதன்கிழமை) மாலை 3-00 மணிக்கு நல்லை ஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது,

இவ் ஆலோசனைக் கூட்டத்தில், சமுதாய பொறுப்புள்ள அனைத்து சமய சமூக கலை இலக்கியப் பண்பாட்டு பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள், அருளாளர்கள், அந்தணர்கள், ஆலய நிர்வாகிகள், அறிஞர்கள், சான்றோர்கள் அனைவரும் சமுகம் தந்து ஆலோசனைகளை வழங்குமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கின்றோம்,

சர்வ சமய,<br>
சமுதாய ஒன்றியங்கள்

(எ-2189)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூன் மாதம் 03-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10336/81